1969 பிப்ரவரி 26] [டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து]

வரையில் புதிய வீட்டுக் குழாய் இணைப்புகள் கொடுப்பதற்குத் தற்காலிகமாகத் தடை விதிப்பதும் தவிர்க்க முடியாததாகிறது. பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிற குடிநீர் அளவினை மாநகராட்சி ஏற்கனவே குறைத்துவிட்டது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு நில அடிமட்ட நீர்வளங்களிருந்து புழலேரிக்கு நீர் அனுப்பப்படும் அளவினைப் பெருக்கவும் திட்டமிடப்படுகிறது.

சோதனைக் காரியங்களுக்காக அய்யலச்சேரிப் பகுதியில் நில அடிமட்ட நீர்வளக் குழுவினரால் 80 முதல் 150 அடி வரையில் பல்வேறு ஆழங்களில் இறக்கப்பட்ட 10 துளைக் கிணறுகள் உள்ளன. இத்தகைய கிணறுகள் ஒவ்வொன்றிலிருந்தும் நாளொன்றுக்கு 16 மணி நேரங்களில் நிமிடத்திற்கு 500 காலன் நீர் அதாவது மொத்தத்தில் நாளொன்றுக்கு 48 லட்சம் காலன் நீர் கிடைக்கலாம். இத்திட்டத்தின் முதல் கட்டமாக இத்தகைய கிணறுகளிலிருந்து நீரை இறைத்துத் திறந்தவெளி புழலேரியில் சேருகின்ற திறந்தவெளிக் கால்வாய்க்கு அனுப்பவும் கருதப் படுகிறது. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக, ஒவ்வொரு கிணற்றிலிருந்தும் 16 மணி நேரங்களில் நிமிடத்திற்கு 500 காலன் வீதம் நாளொன்றுக்கு சுமார் 86 லட்சம் காலன் நீர் எடுத்துப் புழலேரியில் சேமித்து வைக்கும் வகையில் அய்யலச்சேரிப் பகுதியில் கூடுதலாக, 18 துளைக் கிணறுகள் இறக்கவும் கருதப்படுகிறது. தாமரைப்பாக்கம் பகுதியிலிருந்து கிடைக்குமென எதிர்பார்க்கக் கூடிய நிகர நீர் அளவு நாளொன்றுக்கு 70 லட்சம் காலன் ஆகும்.

சென்னை உரத்தொழிற்சாலைக்கு நீர் வழங்குவதற்காகப் போடப் பட்ட பஞ்சட்டி ஊற்றுநீர்த் தேக்கங்களிலிருந்து நாளொன்றுக்கு சுமார் 60 லட்சம் காலன் நீர் தற்காலிகமாக எடுத்து, 1969 அக்டோபர் வரை மாநகரக் குடிநீர் வசதியைப் பெருக்கவும் திட்ட மிடப்பட்டுள்ளது. 1969 அக்டோபருக்குப்பின் இந்த நீர் உரத் தொழிற்சாலைக்கு வழங்கப்படும்.

மேற்சொன்ன ஏற்பாடுகளின் வாயிலாக, இம்மாநகருக்கு நீர் வழங்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. மேற்சொன்ன செயற் குறிப்புகளை நிறைவேற்றுவதற்காக ரூ. 37.10 லட்சம் செலவில் திட்டமொன்றுக்கு இவ்வரசு அண்மையில் ஒப்பளிப்பு வழங்கி யுள்ளது. பொதுப்பணித்துறையைச் சேர்ந்த நில அடிமட்ட நீர்வளக் குழுவினரால் இப்பணி செய்து முடிக்கப்படும்.

(ஆ) கிரகாம் (சிவகாசி) பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தும், உயிர் சேதமும்.

THIRU N. S. V. CHITHAN : Sir, I call the attention of the Hon. the Minister for Labour to a matter of urgent public importance, namely the fire accident at Sivakasi Cracker Factory about the 4th January 1969 resulting in the death of a number of people.

* **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : சிவகாசிக்கு அருகிலுள்ள கிரகாம் பட்டாசுத் தொழிற்சாலையில் 1969, ஜனவரி, 3-ம் நாள் பிற்பகலில் தீ விபத்து ஏற்பட்டது. அத்தொழிற்சாலையில் இருந்த 35 அறைகளில் வத்திகள் தயாரிப்பதற்காக 16 அறைகள் பயன் படுத்தப்பட்டன. இவ்விபத்து நடந்த நாளன்று இந்த 16 அறைகளிலும் 28 ஆண்களும் 3 பெண்களும் பணியாற்றி வந்தனர். 1969, ஜனவரி, 3-ம் நாள் மாலை சுமார் 3-30 மணிக்கு 11-ம் எண் அறையில் வெடி விபத்து ஏற்பட்டது; காயம் அடைந்த நவநாதனும் சோமய செட்டியாரும் மொத்தமாக கட்டிய மருந்து தோய்த்து உலர்ந்த நீண்ட வத்தியை (ஒரு சமயத்தில் ஒரு குரோஸ்) வேண்டிய அளவிற்கு இரும்புக் கத்தியால் வெட்டிக் கொண்டிருக்கும்போதே இந்த வெடி விபத்து ஏற்பட்டது. வத்தி, கல் போன்ற கடினப் பொருளில் மோதும்போது வத்தி ஒன்று தீப்பற்றிக் கொண்டு வெடித்தது. இந்த அறையினுள் இருந்த தொழிலாளர்கள், தீயில் சிக்கினர் ; எரிந்து கொண்டிருந்த துணிகளை வீசி எறிந்துவிட்டு அவர்கள் பல வழிகளில் ஓடினர். அடுத்துள்ள 7 அறைகளுக்கும் தீ பரவியது. பாதிக்கப்பட்ட 8 அறைகளில் வேலையில் ஈடுபட்டிருந்த 31 பேர்களில் பெண் ஒருவரும் உட்பட 25 பேர் காயமடைந்தனர் ; எஞ்சிய 6 பேர் தப்பி ஓடிவிட்டனர். காயமடைந்தவர்களுக்கு வெளிப்புறத்தில் ஏற்பட்ட காயமாகும் ; அவர்களுக்கு உடல் முழுவதும் தோல் வெந்து போய்விட்டது. பட்டாசுத் தொழிற்சாலைக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை. பட்டாசு தயாரிக்கப் பயன்படுத்தும் மூலப் பொருளான வத்தி ரூ. 750 மதிப்பிற்கு விரயம் ஏற்பட்டது. தவிர, வேறு இழப்பு இல்லை.

சிவகாசி வருவாய்க் கோட்ட அதிகாரி, விபத்து நேர்ந்த இடத்தைப் பார்வையிட்டார். காயமடைந்தவர்களை உள்ளூர் அரசாங்க மருத்துவ மனைக்கு உடனடியாக எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்தார். பின்னர் மதுரை, அரசாங்க எர்ஸ்கின் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்படவும் ஏற்பாடு செய்தார். மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட 25 பேர்களில் 24 ஆண்கள் பின்னர் மருத்துவ மனையில் இறந்தனர். பெண் தொழிலாளர் ஒருவரே பிழைத்தார். அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

1884-ம் ஆண்டு இந்திய வெடி மருந்துகள் சட்டத்தின் 9 (1) பிரிவின் கீழ் மாஜிஸ்திரேட் விசாரணை நடத்துமாறு, சிவகாசி, வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

நாகபுரியிலுள்ள இந்திய வெடி மருந்துகள் துறை தலைமை ஆய்வாளர், சிவகாசியிலுள்ள அத் தொழிற்சாலை உரிமையாளரின் உரிமத்தை உடனடியாக ரத்துச் செய்துள்ளார்.

**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த

1969 பிப்ரவரி 26] [திரு. என். எஸ். வி. சித்தன்]

பதிலிலிருந்து ஏறத்தாழ 24-க்கும் அதிகமான பேர்கள் உயிர் துறந்திருக்கும் நெஞ்சுருக்கும் செய்தி கிடைத்திருக்கிறது. இதுபோன்ற விபத்துக்கள் இனி நடைபெறாத வண்ணம் பார்த்துக் கொள்வதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன? இந்த விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், இறந்தவர் களுடைய குடும்பத்தினருக்கும் நஷ்ட ஈடு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாஜிஸ்டிரேட் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்ததும், நஷ்ட ஈட்டைப்பற்றி சர்க்கார் முடிவு செய்யும்.

## 4. அறிவிப்புகள்.

### (அ) அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கான தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழு (Senate) 6—12—1968 முதல் திருத்தி அமைக்கப்படவேண்டியிருப்பதால் அக்குழுவிற்கு தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களி லிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி, ஒற்றைமாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 1—3—1969 சனிக் கிழமை மாலை 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 3—3—1969 திங்கட்கிழமை பகல் 12 மணிக் குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 3—3—1969 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது, மூன்றுக்கு மேற் படுமாயின் 5—3—1969 புதன்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் உறுப்பி னர் ஓய்வு அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## 5. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அடுத்த அலுவல், "பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்" ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான நியமனத் தாள்கள் ஏற்கனவே பெறப் பட்டுள்ளன. பேரவையின் 5 (2) விதியின்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியவர்களின் பெயரை நான் முதன் முதலில் அறிவிக்கவேண்டும். அவர்களின் விவரம் பின்வருமாறு :